

திருச்சியில் மறைந்த தொழிலதிபர், கே.என்.ராமஜெயம் அவர்களின் 65 வதுபிறந்தநாளை முன்னிட்டு கேர் கல்லூரி வளாகத்தில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார். நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் அன்பழகன், துணை மேயர் திவ்யா, வழக்கறிஞர் பாஸ்கர், குடமுருட்டி சேகர், டோல்கேட் சுப்பிரமணி, சித்ரா, பாரி வள்ளல், கருணை ராஜா, தர்மன், ராஜேந்திரன், அண்ணாதுரை, தொ.மு.ச. குணசேகர், ஜான்சன், குமார், செவந்தலிங்கம், ராஜேந்திரன், வழக்கறிஞர்கள் கவியரசன், அந்தோணி ராஜ், சிந்தாமணி, செந்தில், பாலமுருகன், கார்த்திக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் கிழக்கு ஒன்றியம், ஆலம்பாளையத்தில் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கினார். இக்கூட்டத்தில் தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்க தமிழ்செல்வன் எம்பி தலைமையில் ஒன்றிய கழக பொறுப்பாளர் கே.கே.துரைசாமி, துணைச் செயலாளர் சி.செந்தில்குமார், காங்கேயம் நகரக் கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் முன்னாள் எம்பி சையது கான், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கே.எஸ்.சரவணகுமார், எஸ்.லட்சுமணன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



நாள் : 04.10.2026 (ஞாயிற்றுக்கிழமை)

| வ.எண் | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | காலை 9.30 | கன்னிவாடி |
| 2. | காலை 10.15 | வடுகபட்டி |
| 3. | காலை 11.00 | கணபதிபாளையம் |
| 4. | காலை 11.45 | தளவாய்பட்டணம் |
| | மதிய உணவு இடைவேளை | |
| வ.எண் | நேரம் | இடம் |
| 1. | மாலை 3.30 | பெரியார் சிலை |
| 2. | மாலை 4.15 | அரசு மேல்நிலைப்பள்ளி (கோட்டைமேடு) |
| 3. | மாலை 5.00 | பூளவாடி ரோடு கார்னர் |

தேர்தல் பணிக்குழு
101 – தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி

## தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!



நாள் : 28.09.2026 (திங்கட்கிழமை)

| வ.எண் | நேரம் | ஒன்றிய/நகர/பேரூர் கழகங்கள் | இடம் |
|---|---|---|---|
| 1. | மாலை 5.00 | குண்டடம் மேற்கு ஒன்றியம் | மானூர்பாளையம் |
| 2. | மாலை 6.00 | தாராபுரம் மேற்கு ஒன்றியம் | கோவிந்தாபுரம் |
| 3. | இரவு 7.00 | தாராபுரம் கிழக்கு ஒன்றியம் | மணக்கடவு |
| 4. | இரவு 8.00 | மூலனூர் மேற்கு ஒன்றியம் | கிளாங்குண்டல் |

தேர்தல் பணிக்குழு
101 – தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி

### தட்டாஞ்சாவடி தொகுதி கழக வேட்பாளர்

# சேது செல்வத்தை ஆதரித்து வீடு வீடாக வாக்கு சேகரிப்பு!

### கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி – துணை மேயர் காமராஜ் தலைமையில்!

புதுச்சேரி, செப். 27-

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து, கழக துணைப் பொதுச்செயலாளர் க. பொன்முடி மற்றும் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் காமராஜ் ஆகியோர் லஷ்மி நகர் பகுதியில் பகுதியில் வீடு வீடாக சென்று உதய சூரியன் சின்னத் திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து கழக நிர்வாகிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



அந்த வகையில் லஷ்மி நகர் பகுதியில் கழக துணைப் பொதுச்செயலாளர் க. பொன்முடி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் காமராஜ், தொகுதி செயலாளர் சிவக்குமார் தலைமையில் திமுகவினர் வீடு வீடாக சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். அப்போது அப்பகுதி மக்கள் பூக்கள் தூவியும், ஆரத்தி எடுத்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது ஆளும் அரசின் அவலங்களை எடுத்துக்கூறியும், திமுக வேட்பாளர் சேது செல்வத்தை வெற்றி பெற வைத்தால், தட்டாஞ்சாவடி தொகுதி மக்களின் அடிப்படை தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி தருவார் என்றும், சுகாதார மான குடிநீர் கிடைக்க வும், சரியான கட்டமைப்புடன் கூடிய கழிவுநீர் வாய்க்கால், குண்டும், குழியுமாக உள்ள சாலையை சீரமைத்தல், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட சரியான வழிகாட்டுதலுடன் கூடிய கடன் வசதி உள்ளிட்ட மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து குண்டடம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற திருப்பூர் வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் திருப்பூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார், தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் செ.உமா மகேஸ்வரி, கழகப் பொறியாளர் அணி துணைச் செயலாளர் அம்பாள் நந்தகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ் சரவணன் நம்பி உள்பட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஜெம் வீரமணி விவகாரம்: நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும்

# 70 நாட்கள் விசாரணை நடத்த தாமதப்படுத்தியது ஏன்?

### த.வெ.க. அரசுக்கு முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை.செப்.27.

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை களுக்கு உள்ளாக்கிய மிருகம் ஜெம் வீரமணி மீதான வழக்கை முடித்து வைக்க இயலாது விசாரணையை தீவிர படுத்துங்கள் என்று போக்சோ நீதிமன்ற பெண் நீதிபதி ஜுன் 19ஆம் தேதி உத்தரவிட்ட பிறகும் 70 நாட்கள் விசாரணை நடத்த தாமதப்படுத்தியது ஏன் CMsir?



யாராலும் எந்த காலத்திலும் மன்னிக்க முடியாத குற்றச்சாட்டுக்கு உள்ளான ஜெம் வீரமணியுடன் தொடர்பில் இருந்த அமைச்சர்கள் வெங்கடரமணா, லோகேஷ் தமிழ்ச் செல்வன் மற்றும் பேரவை தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் ஆகியோர் நடத்திய ரகசிய பேச்சுவார்த்தையின் மர்மம் என்ன?

ஜெம் வீரமணி எங்கள் குடும்ப நண்பர் என்று அமைச்சர்கள் பொது வெளியில் அவரோடு மேடையில் இருந்தபடி அறிவித்து விசாரணையை நீர்த்துப் போகச் செய்ய காவல்துறைக்கு சிக்கல் கொடுத்தது ஏன்?

முதலமைச்சரின் நண்பர்கள் ஆன ஆந்திர ரெட்டி கேங்க் நடத்தும் கனிம நிறுவனங்களிடம் ஜெம் வீரமணியின் கனிம நிறுவனங் களை அபகரித்துக் கொடுக்க நடைபெற்றதாக கூறப்படும் முயற்சிகளை இல்லை என்று மறுக்க முடியுமா CMsir?

உங்கள் மடியில் கனமில்லை என்றால் ஜெம் வீரமணியுடன் தொடர்பில் இருந்த இரண்டு அமைச்சர்கள் மற்றும் பேரவை தலைவரை பதவி நீக்கம் செய்துவிட்டு அவர்களைசிபிஐவிசாரணைக்கு உட்படுத்த தயாரா CMsir?

கடந்த நான்கு மாதங்களில் பதிவான 160 க்கும் மேற்பட்ட பாலியல் வன்கொடுமை வழக்குகளை மறைத்துவிட்டு 25 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பாலியல் வழக்கு குறித்து திடீரென ஆவேசமாக பேசும் முதலமைச்சரே நீங்கள் பிரச்சாரத்திற்காக மதுராந்தகம் வந்து கொண்டிருந்தபோது சென்னை வண்டலூரில் பள்ளி மாணவியை காமுகர்கள் பலர் சேர்ந்து கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த விவகாரம் தங்களுக்கு எழுதிக்கொடுத்த ஸ்கிரிப்டில் இல்லையா CMsir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### த.வெ.க. அரசு உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால்

# ஆவினுக்கே பால் ஊற்றும் நிலை ஏற்படும்!

### ‘தினகரன்’ நாளேடு எச்சரிக்கை!

சென்னை, செப். 27-

ஆவின் பால் விநியோகத்தை சீரமைக்காவிட்டால் ஆவினுக்கே பால் ஊற்றும் நிலை ஏற்படும் என்று தினகரன் நாளிதழ் தெரிவித்துள்ளது.

ஆவின் பால் தட்டுப்பாடு குறித்து தினகரன் நாளிதழ் வெளியிட்ட சிறப்பு கட்டுரையில், நாள் ஒன்றுக்கு ஆவினுக்கு 37 லட்சம் லிட்டர் பால் தேவைப்படும் நிலையில், 27 லட்சம் லிட்டர் பாலை மட்டும் ஆவின் கொள்முதல் செய்வதாக கூறியுள்ளது. சென்னையில் நாள்தோறும் 16.5 லட்சம் லிட்டர் ஆவின் பால் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், கடந்த மாதங்களில் அதில் 25 சதவீத விநியோகம் குறைந்துள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கடலூர் என பல்வேறு மாவட்டங்களிலும் ஆவின் பால் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. பச்சிளம் குழந்தைகள், முதியவர்கள் அருந்தும், கொழுப்பு சத்து குறைவான நீல நிற பால் பாக்கெட் கிடைப்பதிலும் சிக்கல் நிலவுகிறது. ஆவின் பால் தட்டுப்பாட்டிற்கு கொள்முதல் குறைந்தது காரணம் என, பால்வளத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தட்டுப்பாடு நிலவும் நேரத்திலும் 5 லட்சம் லிட்டர் பால் ஆன்லைன் விற்பனை வாயிலாக தனியார் நிறுவனங்கள் மற்றும் சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கான நேரடி விநியோகத்திலேயே போதுமான பால் கிடைக்காத நிலையில், கூடுதல் அளவில் பாலை ஆன்லைன் விற்பனைக்கு அனுப்புவது தட்டுப்பாட்டை மேலும் அதிகரிக்கக்கூடும். இதனால் தான் ஆவின் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகிறது.

உற்பத்தியாளர்களிடமிருந்து போதுமான அளவு பாலை கொள்முதல் செய்வது, பொதுமக்களுக்கான விநியோகத்தை உறுதி செய்வது மற்றும் நிறுவனத்தின் நிதி இழப்பை கட்டுப்படுத்துவது ஆகியவற்றில் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், எல்லோருக்கும் பால் வழங்கும் ஆவின் நிறுவனத்திற்கே பால் ஊற்றி மூடும் நிலை உருவாகி விடும் என்று பால் முகவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ள தாக தினகரன் நாளிதழ் தெரிவித்துள்ளது.



இடைத்தேர்தல் நடைபெறும் தாராபுரத்தில் மனிதநேய ஜனநாயக கட்சியின் தலைவர் மு.தமிமுன் அன்சாரி திருப்பூர் மாவட்ட செயலாளர் ராயல் ராஜா தலைமையில் ம.ஜ.க.வினர் தீவிர தேர்தல் பரப்புரையில் கடந்த ஒரு வாரமாக ஈடுபட்டு வருகின்றனர். தி.மு.க. தலைமையிலான தோழமை கட்சியினருடன் ஒருங்கிணைந்து அவர்கள் செயல்பட்டு வருகின்றனர். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் க.செல்வராஜ் உள்ளார்.